# ஸ்ரீ ஆனந்த ஆஞ்ஜனேயம்

## ஸ்ரீ ஸ்வாமியால் அனுக்ரஹிக்கப்பட்ட திவ்யகதைகள்




விஸ்வபதி

திம்மராஜீவிஸ்வபதி ராமகிருஷ்ணமூர்த்தி

ஶ்ரீரஸ்து சுபமஸ்து அவிக்னமஸ்து

# ஶ்ரீ ஆனந்த ஆஞ்ஜனேயம்

## ஶ்ரீ ஸ்வாமியால் அனுக்ரஹிக்கப்பட்ட திவ்யகதைகள்




விஸ்வபதி

திம்மராஜீவிஸ்வபதி ராமகிருஷ்ணமூர்த்தி



श्रीं

**SHRI DESIGNS**

**VEDIC LOGO DESIGNERS**

www.lordofsevenhills.com

www.vratams.com

Hyderabad

2016

# ஸ்ரீ ஆனந்த ஆஞ்ஜனேயம்

(ஸ்ரீ ஸ்வாமியால் அனுக்ரஹிக்கப்பட்ட திவ்ய கதைகள்)

© Copy rights reserved

First Edition: 2014 (Telugu)
Second Reprint 2015 (Telugu)
2016 (Tamil)

Price: precious

For Copies
**"Viswapathi"**
**T.V.R.K MURTHY, M.Tech.,**
Flat NO:204, Plot No.11,
Sai Arunodaya Apartments,
Sunder Nagar Colony,
Near Erragadda,
Hyderabad – 500 008. India.

The other vratam books written by
**"Viswapathi"**
T.V.R.K MURTHY, M.Tech.,
Can be downloaded and printed from
Website:www.lordofsevenhills.com
Email: viswapathi@yahoo.com
vediclogos@yahoo.com

Printed at:
Sri Maheshwari Printers
Panjagutta, Hyderabad

## நிவேதன (முன்னுரை)

யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர க்ருதமஸ்த காஞ்சலிம்
பாஷ்பவாரி பரிபூர்ண லோசனம்
மாருதிம் நமத ராஷஸாந்தகம்.

ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமி பக்தர்களுக்கு சுலபமாக அனுக்ரஹிப்பவர். அவரை தினமும் ஸேவிப்பவர்கள், புத்தி, பலம், தேஜஸ், கீர்த்தி, (புகழ்) தைரியம் கிடைக்கப்பெறுவார்கள். எந்த வித தீராத நோய்களும் அவரை நினைத்த மாத்திரத்தில் விலகிப் போகும், சகல ஸௌபாக்கியங்களும் கிடைக்கும்.

அந்த ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாளின் அனுக்ரஹத்தால் நான் இதுவரை 6 புத்தகங்களை எழுதியுள்ளேன். அந்த புத்தகங்கள் எல்லாம் பக்தர்களை ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தி உள்ளது. ஏன் என்றால், அது, அந்த பெருமாளின் அனுக்ரஹம் தவிர வேறெதுவுமில்லை. இவற்றில் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத கல்பம், ஸ்ரீ லஷ்மிநரஸிம்ம விரதகல்பம் மிகவும் பிரஸித்தி பெற்று அனேக வெளிநாட்டிலும், நம் நாட்டிலும் மிகவும் பிரபலமாகி, பக்தர்கள் வீடுகளிலும், அனேக தேவாலயங்களிலும் தினமும் அனுஷ்டிக்கப்படுகிறது. என்னுடன் ஆத்மார்த்தமாக இருப்பவர்களில் சிலர் ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமியின் லீலைகளை புத்தகமாக எழுதும்படி கேட்டுக் கொண்டார்கள். அந்த ஸ்வாமியின் அனுக்ரஹகம் இருந்தால் நிச்சயமாக எழுதுவேன் என்று சொன்னேன். இத்தனை நாட்களுக்கு பிறகுஅந்த பவனபுத்திரனின் அனுக்ரஹம் கிடைத்தது. ஒரு நாள் விடியற்காலையில் அந்த ஸ்வாமி அற்புதரூபத்துடன் பிரகாசமாக எவ்வளவோ ஆனந்த ஸ்வருபனாக கனவில் (சொப்பனத்தில்) காட்சி அளித்தார்.

அந்த நாளிலேயே ஆனந்த ஆஞ்ஜனேயம் எழுத வேண்டும் என்று முடிவானது. இந்த புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் அந்த ஸ்வாமி அனுக்ரஹமே தவிர வேறொன்றுமில்லை. இதில் என்னுடைய பெருமை எதுவுமில்லை. எல்லாம் அந்த ஸ்வாமியின் அனுக்ரஹமே, ஸ்ரீமன் நாராயணன் அவதாரமாகிய ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் ப்ரிய பக்தன் ஆஞ்ஜனேய ஸ்வாமி. சிரஞ்ஜீவியான அந்த ஸ்வாமி இப்போழுதும் தன்னையோ அல்லது ஸ்ரீ ராமபிரானையோ நாம ஸ்மரனை செய்யுமிடத்தில் நிச்சயமாக இருப்பார்.

அந்த ஸ்வாமியின் தயவால் தான் இந்த புத்தகம் என்னால் எழுத முடிந்தது. இதெல்லாம் அந்த ஸ்வாமியின் அனுக்ரஹம் தவிர வேறெதுமில்லை. இந்த புத்தகத்தை படிப்பவர்களுக்கு சகல ஸௌபாக்கியங்களும் கிடைக்கப் பெறுவார்கள். எந்த வித தேகக்குறையும் ஏற்படாது எவரொருவர் ஆஞ்ஜனேய ஸ்வாமியை மனதில் தியானித்து இந்த புத்தகத்தை படிக்கிறார்களோ அவர்கள் எல்லாவற்றிலும் வெற்றி (ஜெயம்) கிடைக்கப்பெறுவார்கள்.

இந்த புத்தகத்தை எழுத நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவி செய்தவர்களுக்கும், படித்த உங்களுக்கும், கேட்டவர்களுக்கும் பிரசாதம் பெற்றுக்கொண்டவர்களுக்கும், சகல ஆயுள், ஆரோக்கியம், சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டுமென்று அந்த ஆஞ்ஜனேய ஸ்வாமியை பிரார்த்தனை செய்கிறேன்.

ஸர்வே ஜனா சுகினோ பவந்து
ஸ்ரீ ஹனுமத் கடாக்ஷ ஸித்திரஸ்து
சமஸ்த சன்மங்களானி, பவந்து.

ஹைதராபாத் திம்மராஜீவிஸ்வபதி ராமகிருஷ்ணமூர்த்தி
2016

## இந்த புத்தகத்தை எவ்விதம் படிக்கலாம்?

ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமி பக்தர்களுக்கு எளியவன் இந்த ஸ்வாமியை தினமும் நினைப்பவர்களுக்கு எந்த வித ஆபத்தும் அணுகாது. எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். பிரதிதினமும் இந்த ஸ்வாமியை நினைத்து விட்டு இரவு உறங்கச் சென்றால் நல்ல நித்திரையும், மன அமைதியும் கிடைக்கும். இந்த ஸ்வாமியின் அனுக்ரஹத்தைப் பெற இந்த புத்தகத்தைப் படிப்பது மிகவும் சுலபமான முறையாகும். இந்த புத்தகத்தைப் படிக்கும் போது உபவாஸம் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. சுத்தமாக. குளித்து விட்டு மன அமைதியுடன் இருந்தால் போதும்

இந்த புத்தகத்தை யாராக இருந்தாலும், வயது, குலம், வித்தியாசம் இல்லாமல் படிக்கலாம். ஆண், பெண் பேதமில்லை. எந்த மாதமானாலும், எந்த நாட்களிலும் படிக்கலாம். ஏகாதசி, பௌர்ணமி, திதியிலோ அல்லது மகம், பூரட்டாதி, சுவாதி, நட்சத்திரத்திலோ படித்தால் மிகவும் பலன் கிடைக்கும். வீட்டில் பூஜை அறையில் விடியற்காலையில் படிப்பது நல்லது. இந்த புத்தகத்தை படித்து முடித்த உடனே இரண்டு வாழைப்பழங்களை நைவேத்தியம் செய்வது மிகவும் நல்லது. முடிந்தவர்கள் தேங்காய் கூட உடைக்கலாம்.

பண நெருக்கடி, ஆரோக்கிய குறை போன்ற கஷ்டங்களை அனுபவிப்பவர்கள் இந்த புத்தகத்தை வரிசையாக 3நாட்கள் ஸ்வாமி ஆலயத்திலோ அல்லது வேறு எந்த ஆலயத்திலோ காலையிலோ அல்லது மாலையிலோ அமர்ந்து படித்தால் அந்த கஷ்டங்கள் எல்லாம் உடனே விலகிவிடும்.

பரீட்சை எழுதும் மாணவ, மாணவியர்கள் ஏதாவது ஒரு சனிக்கிமையில் ஸ்வாமி ஆலயத்தில் அமர்ந்து கொண்டு இந்த புத்தகத்தை படித்தால் அந்த ஸ்வாமியின் அனுக்ரஹத்தால் பரீட்சையை வெற்றிகரமாக எழுதிமுடிப்பார்கள்.

குழந்தை ப்ராப்தி இல்லாதவர்கள் ஒரு சனிக்கிழமையில் தொடர்ந்து 3 நாட்கள் ஸ்வாமியின் ஆலயத்திலோ அல்லது வேறு ஆலயத்திலோ இந்த புத்தகத்தை படித்தால் சீக்கிரமாக குழந்தை ப்ராப்தி உண்டாகும். திருமணமாகாத ஆண், பெண் இருவரும் இதேவிதமாக இந்த புத்தகத்தை படித்தால் கூடிய விரைவிலேயே திருமணம் நிச்சயிக்கப்பெறுவார்கள்.

மன நிம்மதி இல்லாமல் தவிப்பவர்கள் ஏதாவது ஒரு சனிக்கிழமையில் இந்த புத்தகத்தை வீட்டிலோ அல்லது ஸ்வாமி ஆலயத்திலோ படித்தால் மன அமைதி கிடைக்கப்பெறுவார்கள். ஆரோக்கியக்குறைவால் பாதிக்கப்பட்டவர்களுக்காகஈ அவர்களுடைய உறவினர்களோ, நண்பர்களோ இந்த புத்தகத்தை அவர்கள் கேட்குமாறு படித்தால் அவர்களுக்கு ஆரோக்கியக்குறைகள் நீங்கி பூரண ஆரோக்கியத்தை அடைவார்கள்.

ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமி ஆலயத்தில் இந்த புத்தகத்தை அங்கு வரும் பக்தர்களுக்காக படிப்பவர்களுக்கு ஸ்வாமியின் அனுக்ரஹத்தால் எப்போதும் சுகஸௌக்கியங்களுடன் வாழ்வார்கள். நம் சௌகரியத்தைப் பொறுத்து காலையிலோ, மாலையிலோ படிக்கலாம், படித்து முடித்த உடன் ஸ்வாமிக்கு வாழைப்பழங்களை நிவேதனம் செய்து, பக்தர்கள் அனைவரும் கண்களில் ஒற்றிக்கொண்டு பிரசாதமாக எடுத்துக் கொள்வது நல்லது.

வெளி நாடுகளில் இருக்கும் தங்கள் பிள்ளைகளுக்காகவோ, உறவினர்களுக்காகவோ நீங்களே கூட இந்த புத்தகத்தை படிக்கலாம். அந்த ஸ்வாமியின் அனுக்ரஹத்தால் அவர்களுக்கு, குழந்தை பாக்கியம் ஆரோக்கியம், திருமணம், உத்தியோகம் என அனைத்து பிரச்சினைகளும் ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமி ஆலயத்தில் தொடர்ந்து 3 நாட்கள் படித்தால் உடனே பலன் கிடைக்கும்.

ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமி ஆலயத்தில் இந்த புத்தகத்தை பக்தர்களுக்காக படிப்பவர்களுக்கு கோடி ஜன்ம புண்ணிய பலன் கிடைக்கப்பெறுவார்கள். ஆலய அர்ச்சகர்கள் பிரதி சனிக்கிழமைகளில் ஸ்வாமியின் முன்பாக இந்த புத்தகத்தை படித்தால் அவர்களுக்கும், அந்த ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கும் சுகமான வாழ்க்கை கிடைக்கப் பெறுவார்கள்..

திருமணம், க்ரஹப்பிரவேசம், புது வியாபாரம் போன்ற எந்த ஒரு சுப நிகழ்ச்சி தொடங்கினாலும் வீட்டில், தனியாகவோ, பந்து மித்திரர்களுடனோ இந்த புத்தகத்தை படித்து ஸ்வாமிக்கு பிரசாதம் நைவேத்தியம் செய்து எடுத்துக் கொண்டால் தொடங்கிய சுப காரியங்கள் நல்ல விதமாக முடியும். அதன் பிறகும் கூட மற்றோரு முறையும் பந்து மித்திரர்கள் அனைவரையும் அழைத்து இந்த புத்தகத்தை படித்து, நைவேத்தியம் செய்து பிரசாதம் எடுத்துக் கொண்டால் மிகவும் நல்லது.

இந்த விதமாக எந்த முறையிலும், எந்த நாளிலும் இந்த புத்தகத்தைப் படித்து ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமியின் அருளுக்குப் பாத்திரர்களாவீர்கள்.

திம்மராஜீவிஸ்வபதி ராமகிருஷ்ணமூர்த்தி

## ஸ்ரீ ஆஞ்ஜனேய அஷ்டோத்தர சத நாமாவளி

(ஆரம்பத்தில் "ஓம்" என்றும் இறுதியில் "நம" என்றும் சேர்த்துச் சொல்லவும்.)

ஆஞ்ஜனேயாய
மஹாவீராய
ஹநுமதே
மாருதாத்மஜாய
தத்வஜ்ஞாநப்ரதாய
ஓம் ஸீதாதேவீ
முத்ராப்ரதாயகாய
அசோகவனிகாச்சேத்ரே
ஸர்வமாயாவிபஞ்ஜநாய
ஸர்வ பந்த விமோக்த்ரே
ரக்ஷோவித்வம்ஸகாரகாய
பரவித்யா பரீஹாராய
பரசௌர்யவிநாசநாய
பரமந்த்ர நிராகர்த்ரே
பரயத்ந்ர ப்ரபேதகாய
ஸர்வக்ரஹ விநாசினே
பீமஸேனஸஹாயத்ருதே
ஸர்வது:கஹராய
ஸர்வலோகசாரிணே
மனோஜவாய
பாரிஜாததருமூலஸ்தாய
ஸர்வமந்த்ரஸ்வரூபவதே
ஸர்வந்த்ரஸ்வரூபிணே
ஸர்வயந்த்ராத்மகாய
கபீச்வராய
மஹாகாயாய
ஸர்வரோகஹராய
ப்ரபவே
பலஸித்திகராய
ஸர்வவித்யா ஸம்பத்
பிரதாயகாய
கபிஸேநாநாயகாய
பவிஷ்யச்சதுராননாய
குமாரப்ரஹ்மசாரிணே
ரத்னகுண்டலதீப்திமதே
சஞ்சலத்வால ஸன்னத்த
லம்பமான சிகோஜ்வலாய
கந்தர்வ வித்யா
த்தவஜ்ஞாய
மஹாபல பராக்ரமாய
காராக்ருஹ விமோக்த்ரே
ச்ருங்கலாபந்தமோசகாய
ஸாகரோத்தாரகாய
ப்ராஜ்ஞாய
ராமதூதாய
ப்ரதாபவதே
வானராய
கேஸரிஸுதாய
ஸீதாசோகநிவாரணாய
அஞ்ஜனாகர்ப ஸம்பூதாய
பாலார்க்கஸத்ருசானனாய
விபீஷணப்ரியகராய
தசக்ரீவகுலாந்தகாய
லக்ஷ்மணப்ராணதாத்ரே
வஜ்ரகாயாய
மஹாத்யுதயே
சிரஞ்ஜீவினே
ராமபக்தாய
தைத்யகார்யவிகாதகாய
அக்ஷஹந்த்ரே
காஞ்சநாபாய
பஞ்சவக்த்ராய

மஹாதபஸே
லங்கிணீ பஞ்ஜனாய
ஸ்ரீமதே
ஸிம்ஹிகாப்ராண
பஞ்ஜனாய
கந்தமாதன சைலஸ்த்தாய
லங்காபுரவிதாஹகாய
ஸுக்ரீவஸசிவாய
தீமாய
சூராய
தைத்யகுலாந்தகாய
ஸுரார்ச்சிதாய
மஹாதேஜஸே
ராமசூடாமணி ப்ரதாய
காமரூபிணே
பிங்களாக்ஷாய
வார்த்திமைனாக பூஜிதாய
கபளீக்ருத
மார்த்தாண்டமண்டலாய
விஜிதேந்த்ரியாய
ராமஸீக்ரீவ ஸந்தாத்ரே
மஹாராவண மர்த்தனாய
ஸ்.்.படிகாபாய
வாகதீசாய
நவவ்யாக்ருதி பண்டிதாய
சதுர்பாஹவே
தீனபந்தவே
மஹாத்மனே
பக்தவத்ஸலாய
ஸஞ்ஜீவனநகாஹர்த்ரே
சுசயே
வாங்மினே
த்ருடவ்ரதாய
காலநேமி ப்ரமதனாய
ஹரிமர்க்கடமர்க்கடாய
தாந்தாய
சாந்தாய
ப்ரஸன்னாத்மனே
சதகண்டமதாபஹ்ருதே
யோகினே
ராமகதாலோலாய
ஸீதான்வேஷணபண்டிதாய
வஜ்ரதம்ஷ்டராய
வஜ்ரநகாய
ருத்ரவீர்யஸமுத்பவாய
இந்த்ரஜித் ப்ரஹிதாமோக
ப்ரஹ்மாஸ்த்ர
விநிவாரகாய
பார்த்த த்வஜாக்ர
ஸம்வாஸினே
சரபஞ்ஜரபேதகாய
தசபாஹவே
லோகபூஜ்யாய
ஜாம்பவத் ப்ரீதி வர்தனாய
ஸீதாஸமேத ஸ்ரீராம
பாதஸேவா துரந்தராய

இதி ஸ்ரீ ஆஞ்ஜனேய அஷ்டோத்தர சத நாமாவளி
ஸம்பூர்ணம்

ஆஞ்ஜனேய ஆஞ்ஜனேய ஆஞ்ஜனேய பாஹிமாம்

ஹனுமந்த ஹனுமந்த ஹனுமந்த ரக்ஷமாம்

## ஸ்ரீ ஆஞ்ஜனேய த்வாதச நாமாவளி

ஹனுமான் அஞ்ஜனா சூநஹ வாயுபுத்ரோ மஹாபலஹ:

ராமேஷ்டக பல்குண சகஹ பிங்காக்ஷோ மித ஷக்ரமஹ:

உததி க்ரமன ஸ்சைவ சீதாசோக விநாஸதஹ:

லக்ஷ்மன ப்ராணதாதாச தசக்ரீவஸ்ய தர்பபஹா:

த்வாத ஸைதானி நாமானி கபிந்தரஸ்ய மஹாத்மநஹ:

ஸ்வாபகாலே படே:.நித்யம் யாத்ராகாலே விசேஷதஹ:

தஸ்ய ம்ருத்யு பயம் நாஸ்தி சர்வத்ர விஜயீ பவேத்:

# முதல் அத்தியாயம்

## ராமசர்மா கதை

ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமி பக்தர்களுக்கு எளியவன் தன்னை நம்பி வணங்குபவர்களுக்கு தினமும் நிழல் போல் தொடர்ந்து காப்பாற்றும் அம்ருதமூர்த்தி. அந்த ஸ்வாமியை நினைத்துக்கொண்டால் மனதில் எந்த விதமான பயமும் விலகிப்போகும். மனம் பலவிதமாக மனக் குழப்பத்தில் இருக்கும் போது ஸ்ரீ ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமியை ஒருமுறை மனதில் தியானித்தால் உடனே மனம் குழப்பம் நீங்கி தெளிவுபெறும். மஹா பலவான், ஆணவமில்லாதவர், மிகுந்த தயாள குணம் கொண்டவர் இப்படிப்பட்ட ஹனுமந்த ஸ்வாமியை மனதில் தியானம் செய்பவர்களுக்கு அவர்கள் தொடங்கிய, நினைத்த காரியங்கள் அனைத்தும் வெற்றியுடன் முடியம்.

முன்னொருகாலத்தில் வெங்கடாபுரம் எனும் கிராமத்தில் ராமசர்மா என்னும் ஏழை பிராமணர் வசித்து வந்தார். இயற்கையாகவே ஸ்ரீ ராமபக்தனான ராமசர்மா தினமும் ஸ்ரீ ராமரை தியானம் செய்து அந்த ஸ்வாமிக்கு மிகவும் ப்ரீதியான ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமியையும் தினமும் பூஜித்து வருபவர். முன் ஜென்ம பலன்காரணமாக ஏழையாக இருந்தாலும், நல்ல நடத்தையினால் தன்னுடன் இருப்பவர்களையே பகவானாக நினைப்பவர். ஊரில் நடக்கும் சுபகாரியங்களில் புரோகிதராக இருந்து தன் நாட்களை கடத்திவந்தார். அந்த ஊரில் மட்டுமல்லாது சுற்றுப்புறத்தில் உள்ள கிராமங்களிலும் புரோகிதராக வேலைக்கு சென்றுவந்தார்.

நாட்கள் இப்படிபோகும்போது ஒருநாள் பக்கத்து ஊரான சீதாராமபுரத்தில் உள்ள பணக்காரர் வீட்டில் மறு நாள் காலை கிரஹப்பிரவேசம் நடத்த வேண்டும் என்று அழைப்பு வந்தது. அந்த ஊருக்கு செல்லும் வழியானது அடர்ந்த காட்டுக்குள் போகுமாறு உள்ளது. அந்த வழியாக இரவு நேரத்தில் செல்வது உசிதமானதல்ல், காட்டில் இரவில் கொடூர மிருகங்களால் பயம் அதிகமாக உள்ளது. அதனால் ராமசர்மா அன்றே மதியம் புறப்பட்டு மாலைக்குள் சீதாராமபுரம் சென்றுவிடவேண்டும் என்று முடிவு செய்தார். சாயந்திரம் அந்த ஊரை அடைந்தால் மறுநாள் காலை கிரஹப்பிரவேசம் முடித்து விட்டு அன்று மாலையே வீடுவந்து சேர்ந்துவிடலாம் என நினைத்தார்.

மதியம் *1.00* மணிக்கெல்லாம் சாப்பிட்டு விட்டு புறப்பட ஆயத்தமாக இருக்கும் நேரத்தில் வெங்கடாபுரம் ஜமின்தாரிடம் இருந்து முகூர்த்தம் பற்றி பேச வேண்டும் என்று தகவல் வந்தது. இப்போது தான் ஜமீன்தார் வீட்டிற்குச் சென்றால் சீதாராமபுரம் செல்வதற்கு தாமதமாகிவிடும், அப்படி போகாமல் இருந்தால் ஜமீன்தாருக்கு கோபம் வரும்பட்சத்தில் உள்ளூரில் கிடைக்கும் சின்னச் சின்ன புரோகிதவேலை கூட கிடைப்பது மிகவும் கஷ்டமாகிவிடும் ராமசர்மா இப்படி நினைத்து எல்லாம் அந்த ஸ்ரீ ராமசந்திர பிரபு துணை என்று அவர் மீது பாரத்தைப் போட்டு விட்டு, ஜமின்தாரை பார்ப்பதற்காகபுறப்பட்டார். அந்த நேரத்தில் ஜமின்தார் வீட்டை அடையும் போது, ஜமீன்தார் ஏதோ அவசரவேலையாக வெளியே சென்றுள்ளதாகவும், ராமசர்மா வந்தால் காத்திருக்கும்படி சொன்னதாகவும் வேலையாட்கள் கூறினார். இந்த வார்த்தையைக் கேட்ட உடன் ராமசர்மாவுக்கு மனக்குழப்பம் ஏற்பட்டது.

இந்த ஜமீன்தார் எப்பொழுது வருவாரோ? தான் எப்போது சீதாராமபுரம் சென்றடைவோமோ என்று வேதனைப்பட்டார்.

மாலை 4.00 மணி அளவில் வீட்டுக்கு வந்த ஜமீன்தார் உள்ளேசென்று 1மணி கழித்து வெளியே வந்தார். ராமசர்மாவிடம் தன் மகளுக்கு விவாகம் செய்யநினைத்து இருப்பதாகவும் ஒருமுறை ஜாதகம் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் கூறினார். அந்த பெண்ணின் ஜாதகத்தை பரிசீலித்த ராமசர்மா கூடிய விரைவில் திருமணம் நடைபெறும் என்று சொன்னார். இதெல்லாம் முடிந்து சாயந்திரம் ராமசர்மா ஜமீன்தாரிடம் விடைபெற்றுக்கொண்டு, ஓட்டமும், நடையுமாக வீடு வந்து சேர்ந்தார். மனைவி ராமசர்மாவிடம் இவ்வளவு இருட்டி விட்டதே இதற்குப்பிறகு சீதாராமபுரம் எப்படி செல்வீர்கள் என்று கேட்டாள். ஆனாலும் ராமசர்மா வரும் வருமானத்தை இழக்க மனமில்லாமல் கண்டிப்பாக சென்று வருகிறேன். எல்லாவற்றிற்கும் அந்த ஸ்ரீ ராமச்சந்திர ஸ்வாமிதான் துணை என்று தன் மனைவியிடம் கூறிவிட்டு புறப்பட்டார். இனி வேறெந்த வழியுமில்லாமல் கணவருக்கு (ராமசர்மாவுக்கு) எத்தனையோ முன் ஜாக்கிரதையை கூறி அனுப்பிவைத்தார்.

ராமசர்மா ஸ்ரீ ராமசந்திரரை மனதில் நினைத்துக்கொண்டு க்ருஹப்பிரவேசத்திற்கு தேவையான சாமான்களை தோளில் சுமந்து கொண்டு சிறிது நேரத்தில் காட்டு வழியில் பிரவேசித்தார். எல்லாம் ஒரே இருட்டாக இருக்கிறது, வழிகூட தென்படவில்லை எங்கோ ஆந்தை பயங்கரமாக கத்திக்கொண்டிருக்கிறது ராமசர்மாவுக்கு பயம் ஏற்பட்டது, அந்த ஹனுமந்த ஸ்வாமியை மனதில் நினைத்துக்கொண்டார். எப்படிப்பட்ட ஆபத்தான

சமயங்களிலும் ஆதரிக்கும் பகவான் ஸ்ரீ ஆஞ்சனேய ஸ்வாமியே அந்த ஸ்வாமி நாமாவளியை சத்தமாக உச்சரித்துக் கொண்டு நடக்கத் தொங்கினார். கண்ணுக்கு தெரியும் தூரத்தில் ஒரு நல்ல பாம்பு படமெடுத்து சீறிக் கொண்டு இருந்தது. ராமசர்மா இருந்த இடத்தில் இருந்தபடியே ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமியை துதித்து அந்த நல்ல பாம்புக்கு நமஸ்காரம் செய்தார். அவ்வளவு தான் அந்த பாம்பு அமைதியாக பக்கத்தில் இருந்த புதருக்குள் சென்று மறைந்தது.

ராமசர்மா மறுபடியும் தனது நடை பயணத்தை தொடர்ந்தார் இன்னும் பத்து நிமிடத்தில் அந்த காட்டு வழிப்பாதை முடிந்துவிடும் நிலையில் எங்கிருந்தோ ஒரு சிறுத்தைப் புலி ஒன்று ராமசர்மாவின் முன்பாக வந்து குதித்தது. எதிர்பார்க்காமல் நடந்த இந்த நிகழ்ச்சியால் ராமசர்மா நிலைகுலைந்தார். தன்னையே உர்ரென்று பார்த்துக் கொண்டு எந்த நேரத்திலும் தன்மீது பாய்வதற்கு தயாராக இருந்த சிறுத்தைப்புலியை பார்க்கும்போது அவருக்கு உயிர் போவதைப்போல் இருந்தது. உடனே ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமியை இப்படி பிரார்த்தித்தார். ஓ ஆஞ்ஜனேயா! பவனபுத்ரா! ஸ்ரீ ராமதூதா! உன்னைத்தவிர அன்யதா சரணம் நாஸ்தி! இலங்கையில் அனேக ராட்சசர்களை சம்ஹாரம் செய்தவர். அந்த சீதைதாயார் இருந்த இடத்தை கண்டு பிடித்தவர் என்னை இந்த ஆபத்தில் இருந்து காப்பாற்று ஸ்வாமி என்று பிரார்த்தித்தார். ராமசர்மாவின் விண்ணப்பங்களைக் கேட்டு பக்தவச்சலனான ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமி அனுக்ரஹித்தார். உடனே ஒரு நொடியில் பக்கத்து மரத்தின் மீதிருந்து ஒரு

வானரம் பயங்கரமாக அலறிக கொண்டு அந்த சிறுத்தைப் புலியின் மீது குதித்தது. எதிர்பாராமல் நடந்த இந்த நிகழ்ச்சியால் பயந்துபோன சிறுத்தைப்புலி உடனே சுதாரித்துக் கொண்டு அந்த வானரத்தின் மீது பாய்ந்தது. எவ்வளவோ பிரகாசமாக இருந்த அந்த வானரம் சாதாரன மானதில்லை, மிகவம் பயங்கரமாக கத்திக்கொண்டு சிறுத்தைப் புலி முதுகின் மீது தன் கூரான நகங்களினால் பிறாண்டியது. இனிமேல் சமாளிக்க முடியாதென நினைத்து சிறுத்தைப் புலி காட்டுக்குள் ஓடிமறைந்து விட்து. இது நடந்த உடனேயே அந்த திவ்ய வானரம் கூட பக்கத்தில் இருந்த மரத்தின் மீது குதித்து, மிகவும் பிரகாசமான ஒளியுடன் மறைந்துவிட்டது. நடந்த விஷயங்கள் ராமசர்மாவுக்கு புரிந்தது. அந்த ஹனுமந்த ஸ்வாமியே இந்த ரூபத்தில் வந்து தன்னை ரக்ஷித்தார் என்று புரிந்து கொண்டு அந்த ஹனுமந்த ஸ்வாமியை பலவிதமான ஸ்தோத்திரங்களால் பிரார்த்தனை செய்தார். இனி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு முன் சென்று அந்த ஊருக்கு சென்று கிரஹப்ரவேச வைபவத்தை முடித்து அன்று சாயந்திரமே அவர் வீட்டிற்கு சென்று நடந்ததையெல்லாம் அவர் மனைவிக்கு விவரித்தார். தம்பதிகளிருவரும் ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமியை எவ்வளவோ விதங்களில்துதித்து வந்தனர்.

ஸ்ரீ ராமபக்தனான ஆஞ்சனேய ஸ்வாமியை துதிப்பவர்க்கு சகல ஸௌபாக்யங்களும் கிடைக்கப் பெறுவார்கள். எப்படிப்பட்ட ஆரோக்கியக்குறைவும் விலகிப்போகும். அந்த ஸ்வாமி மிகவும் பலம் பொருந்தியவர், பக்தவச்சலனான அந்த ஸ்வாமி பேரை ஒருமுறை நினைத்தாலே எந்த பூத பிசாசும் நெருங்காது ஹனுமந்த ஸ்வாமியை தினமும் ஸ்மரனை செய்பவர்களுக்கு எந்த வித ஆபத்தும் அணுகாது. நம்முடைய எல்லாவித கோரிக்கைகளையும் தீர்ப்பவரான ஸ்ரீ ஆஞ்சனேய ஸ்வாமியை ஆராதிப்பவர்களுக்கு எல்லா விதத்திலும் வெற்றி கிடைக்கும்.

# இரண்டாவது அத்தியாயம்

## விஷ்னு பட்டு கதை

முன்னொரு காலத்தில் கலிங்க தேசத்தில் கிருஷ்ணாபுரம் என்னும் சிறிய கிராமம் இருந்தது. அந்த கிராமத்தில் விஷ்ணு பட்டர் என்னும் ஏழை பிராமணர் வசித்து வந்தார். அவர் தனக்குத் தெரிந்த சிறிதளவு மந்திரங்களைக் கொண்டு புரோகித வேலை செய்து வந்தார். பிறவியிலேயே ஊனமுற்றவரான விஷ்ணு பட்டருக்கு வருகின்ற வருமானத்தில் குடும்பத்தை நிர்வாகம் செய்வது கஷ்டமாக இருந்தது. தன் ஏழ்மை நிலையை குறித்து எப்போதும் மனவேதனை அடைவார். தன்னை இந்த கஷ்டத்திலிருந்து விடுவிக்கும்படி பகவானை பிரார்த்தனை செய்து வந்தார். அந்த ஊரில் ஸ்ரீ அபயாஞ்ஜனேய ஸ்வாமி கோவில் உள்ளது. அந்த ஆலயம் மிகவும் பழமையான எத்தனையோ மகிமை பொருந்தி அக்கம் பக்கம் கிராமங்களில் மிகவும் பிரசித்தி பெற்றது. ஒவ்வொரு வருடமும் அந்த ஆலயத்தில் எத்தனையோ உற்சவங்கள் நடைபெறும். உற்சவ நாட்களில் மக்கள் லட்சோப லட்சமாக வருவார்கள். அக்கம் பக்கம் கிராமங்களில் உள்ளவர்களை எல்லாம் குடும்பத்தாரோடு, குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வண்டி கட்டிக் கொண்டு வருவார்கள். உற்சவம் நடக்கும் நாட்களில் எல்லாம் ஊர் முழுவதும் திருவிழா கோலம் பூண்டிருக்கும். ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமி ஆலயத்தை வித விதமான மலர்களால் எவ்வளவோ அற்புதமாக அலங்கரிப்பார்கள்.

ஒவ்வொரு வருடம் போலவே அந்த வருடமும் உற்சவம் மிக சிறப்பாக நடந்தது. பிரதி தினமும் ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமிக்கு எத்தனையோ விசேஷமாக பூஜைகள் நடைபெற்றது. சாயந்திரவேலைகளில் ஆலய பிரகாரத்தில் பக்த கோடிகளால் பஜனைகள் நடை பெற்று வந்தது. பிரதி தினமும் எவ்வளவோ புகழ்பெற்ற பாகவதர்களால் இரவு 10மணி முதல் விடியும் வரையில் ஹரி கதைகள் சொல்லிவந்தனர். பக்தர்கள் அனைவரும் ஸ்ரீ ஸ்வாமியின் மகிமைகளை கேட்டு எவ்வளவோ ஆனந்தம் அடைந்து கொண்டே இருந்தார்கள். அந்த ஒரு நாள் செவ்வாய் அன்று ஸ்வாமியை செந்தூர அலங்காரத்தில் மிகவும் அற்புதமாக அலங்காரம் செய்திருந்தார்கள். எவ்வளவோ திவ்ய தேஜஸீடன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அந்த ஸ்வாமி ரூபத்தை தரிசித்து பக்தர்கள் அனைவரும் மெய் மறந்திருந்தார்கள். ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமிக்கு பக்தர்கள் என்றால் எவ்வளவோ வாத்ஸல்யம். எப்படிபட்ட கஷ்டமாக இருந்தாலும் அந்த ஸ்வாமியை நினைத்தால் அந்த கஷ்டம் ஒரு நொடியில் விலகி தொடங்கிய எந்த காரியமாக இருந்தாலும் அந்த காரியம் வெற்றி கரமாக நடக்க வேண்டுமென்றால் அந்த ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமியை ஆராதித்து வந்தால் அந்தகாரியம், எந்த குறையுமில்லாமலும், எந்த தடங்கலுமில்லாமலும் நல்லவிதமாக முடியும். எப்படிப்பட்ட உடல் உபாதை உள்ளவராக இருந்தாலும் அந்த ஸ்வாமியை பிரதி தினமும் வணங்கிவந்தால் கூடிய விரைவிலேயே அந்த உடல் உபாதையில் இருந்து விடுபடுவர்.

விஷ்ணு பட்டர் கூட தினமும் நடக்கும் இந்த திருவிழாவில் கலந்து கொண்டுவந்தார். இந்த வருடமாவது தன்கஷ்டங்கள் தீரவேண்டும் என்று அந்த ஸ்வாமியை பிரார்த்தனை செய்தார். பிறவிலேயே இருக்கும் உடல் ஊனத்துடன் அவருக்கு இப்போது தோல் வியாதியும் சேர்ந்து கொண்டது எத்தனை வைத்தியம் பார்த்தாலும் குறையவில்லை. மூலிகை வைத்தியம் செய்தாலும் குறையவில்லை. விஷ்ணுபட்டர் இதெல்லாம் தன்பூர்வ ஜென்ம கர்மபலன் என்று நினைத்துக்கொண்டார்.

ஒரு நாள் சாயந்திரம் ஆலயத்தில் அவருக்கு வெளியூரிலிருந்து உற்சவத்தைக்காண வந்த ஒரு பண்டிதர் தென்பட்டார். விஷ்ணு பட்டர் அவரை நமஸ்கரித்து தனது கஷ்டங்களையெல்லாம் கூறினார். இந்த கஷ்டங்களிலிருந்து விடுபடுவதற்கு ஏதாவது ஒரு உபாயத்தை கூறும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார். அப்போது அந்த பண்டிதர் விஷ்ணுபட்டுவிடம் இப்படிக் கூறினார். அப்பனே உன் கஷ்டங்களையெல்லாம் நான் தெரிந்து கொண்டேன் யாராக இருந்தாலும் பூர்வஜென்ம கர்மபலனை அனுபவிப்பவதிலிருந்து விடுபட முடியாது. நீ முன் ஜென்மத்தில் இந்த ஊரிலிருந்து 40கி.மீ தூரத்தில் அச்சுதாபுரம் என்னும் ஊரில் உள்ள ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமி கோவில் பூஜை செய்பவராக இருந்தாய், ஆனால் அந்த ஜென்மத்தில் எத்தனையோ பாவகாரியங்களை செய்தாய். ஸ்வாமி ஆலயத்தில் பூஜை செய்பவராக இருந்தாலும் எந்த வித ஆசார அனுஷ்டானங்களையும் செய்யாதவராக இருந்தாய், பிற பெண்களின் மீது மோகம், திருட்டுத்தனம் போன்ற துர்க் குணங்களையெல்லாம் பெற்றிருந்தாய். அப்படிச் செய்த பாவகாரியங்களின்

பலனாக இந்த ஜென்மத்தில் இப்படி அவஸ்தைப்படுகிறாய்.. இதற்கு ஒரேயொரு பரிகாரம் தான் உள்ளது. வரிசையாக தொடர்ந்து 7 சனிக்கிழமைகளில் காலையில் சுத்தமாக குளித்து விட்டு ஆசார அனுஷ்டானங்களுடன் பூரண உபவாசம் இருந்து கொண்டு இந்த ஆலயத்தை சுத்தப்படுத்தி நாள் முழுவதும் அந்த ஸ்வாமியையே நினைத்து, ஆலயம் சுத்தமாக இருக்கும் படி பார்த்துக்கொள். இப்படியாக 7 சனிக்கிழமைகள் அந்த ஸ்வாமிக்கு சேவை செய்தால் உன் பூர்வ ஜென்ம பாவபலன் விலகி உனக்கு நல்லது நடக்கும் என்று கூறினார். விஷ்ணு பட்டர் அந்த பண்டிதருக்கு நமஸ்காரம் செய்து தவறாமல் நீங்கள் கூறியபடியே செய்கிறேன் என்று சொன்னார்.

விஷ்ணு பட்டர் அந்த பண்டிதர் கூறியபடி செய்ய நிர்னயம் செய்து அந்த வாரத்தில் வந்த சனிக்கிழமையே தொடங்கினார். காலையில் ஸ்னானம் செய்துவிட்டு அனுமந்த ஸ்வாமி ஆலயத்திற்கு சென்று அங்கு துடப்பம் வாங்கி ஆலயத்தை பெருக்கி சுத்தம் செய்தார். அவருடைய உடல் ஊனத்தினால் உடல் மிகவும் சோர்வாக இருந்தது. ஆனாலும் விடாப்பிடியாக இரவு வரை ஆலயத்திலேயே இருந்து இரவில் ஸ்வாமியின் பிரசாதத்தை பெற்றுக் கொண்டு வீட்டுக்கு சென்றார். இப்படி 6 வாரங்கள் ஆசார அனுஷ்டானங்களுடன் அந்த பண்டிதர் கூறியபடி ஸ்வாமிக்கு சேவை செய்தார்.

இப்படி 6 வாரங்கள் கழிந்தது, 7வது சனிக்கிழமை வந்தது, காலையிலேயே ஸ்நானம் செய்து சுத்தமான வேஷ்டி கட்டிக் கொண்டு ஸ்வாமியின் ஆலயத்திற்கு வந்தார். அதற்கு முன்தின நாள் இரவு பெரிய காற்று, மழை

வந்ததால் ஆலயம் முழுவதும் உதிர்ந்த இலைகள், தூசி நிறைந்து இருந்தது. ஆலயம் முழுவதும் சுத்தம் செய்து முடிக்க மதியம் 2..மணி ஆனது, மிகவும் சிரமமாக இருக்கவே விஷ்ணு பட்டர் ஆலய மண்டபத்தில் உள்ள தூணில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்தார். மிகவம் சோர்வாக இருந்ததால் அவரை அறியாமலே உறங்கிவிட்டார், நிம்மதியான தூக்கத்தில் அவருக்கு ஒரு கனவு வந்தது. அந்த கனவில் எவ்வளவோதிவ்ய தேஜஸீடன் பிரகாசிக்கும் ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமி தரிசனம் கொடுத்தார். கனவில் ஸ்வாமி வைர, வைடூரியங்களுடன் பளபளக்கும் கிரீடம் அணிந்திருந்தார், கழுத்தில் எவ்வளவோ பிரகாசித்துக் கொண்டிருக்கும் அட்டிகை போன்ற ஆபரனங்கள் அற்புதமான மலர் மாலைகள், காதுகளில் திவ்யமகர குண்டலங்களை, கையிலும், கால்களிலும் தங்க காப்புகளை தரித்த அவர் திவ்யமான புன்னகையுடனும், கருனை பொங்கும் விழிகளுடனும் விஷ்ணு பட்டருக்கு திவ்ய தரிசனம் தந்தார்.

விஷ்ணு பட்டர் அந்த ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்து எத்தனையோ விதங்களில் துதி செய்தார். அந்த ஸ்வாமி அனுக்கிரகம் செய்த அற்புத தரிசனத்துக்கு மகிழ்ச்சி அடைந்த வேளையில் அவருக்கு விழிப்பு வந்தது, கண்ணைதிறந்து கனவில் இப்படி ஒரு திவ்ய தரிசனம் கிடைத்தற்கு சந்தோஷமடைந்த வேளையில் எங்கிருந்தோ வந்த ஒரு வானரம் பக்கத்திலிருந்த மரத்தின் மீதிருந்து விஷ்ணு பட்டருக்கு அருகில் வந்து தன் கையால் விஷ்ணு பட்டரின் முதகில் தடவி கொடுத்துவிட்டு அதே வேகத்தில் மரத்தில் ஏறி ஒரு நொடியில் மாயமாய் மறைந்தது. திடீரென்று நடந்த இந்த நிகழ்ச்சியால் விஷ்ணு பட்டர் மெய் சிலிர்த்து உடம்பெல்லாம் புல்லரிக்க நின்றார்.

இந்த வானரம் தன்னருகில் வருவதென்ன என்று நினைக்கும் போது ஒரு அற்புதத்தை கவனித்தார். தன் உடல் ஊனம் மாயமாய் மறைந்தது, அது மட்டுமின்றி விஷ்ணு பட்டர் தோல் வியாதியும் மாயமாய் மறைந்தது. சரீரத்தில் எவ்வளவோ சக்திவந்தாற்போல் உணர்ந்தார். இதெல்லாம் அந்த ஹனுமந்த ஸ்வாமியின அனுக்கிரஹம் என்று தெரிந்து கொண்டார். தன் கனவில் வந்தது சாட்சாத் ஸ்ரீ ஆனந்த ஆஞ்ஜனேய ஸ்வாமியே என்று தெரிந்துகொண்டார். ஆஹா ஆஞ்ஜனேயா! ஆனந்த ஸ்வரூபா! பக்தவச்சலா! இத்தனை நாட்களுக்குப் பிறகு எனக்கு அனுக்ரஹம் செய்தாயா ஸ்வாமி! உனக்கு இதுவே என்னுடைய நமஸ்காரங்கள். ஓ கருணாமூர்த்தி! ஓ பவனபுத்ரா! உனக்கு இதுவே என்னுடை பணிவான வணக்கங்கள். ஓ பக்தாதீனா! ஓ ஆஸ்ரிதஜனரஷகா! உனக்கு இதுவே என்னுடைய நமஸ்காரங்கள் என்று எத்தனையோ விதமாக அந்த ஸ்வாமியை கொண்டாடினார். இப்படியாக விஷ்ணு பட்டர் சம்பூர்ண ஆரோக்கியம் கிடைக்கப்பெற்றவராய் பிற்காலத்தில் உயர்ந்த புரோகிதராய் எவ்வளவோ பேரும், புகழும் பெற்று எவ்வளவோ பணம் சம்பாதித்தார் விஷ்ணு பட்டர் குடும்பம் எல்லாம் அந்த ஆஞ்சனேய ஸ்வாமியையே சேவித்துக் கொண்டு வாழ்ந்த காலம் முழுவதும் சந்தோஷமாய் சகல சம்பத்துடன் ஆனந்தமாக வாழ்ந்து வந்தனர்.

ஹனுமந்த ஸ்வாமி பக்தர்களுக்கு எளியவர் தன்னை நம்பியவரை எப்படிப்பட்ட கஷ்டங்களிலிருந்தும் விடுபடச்செய்யும் பக்த வச்சலர். எந்த பக்தன் தன்னை கபடமில்லாத நிர்மலமானமனதுடன், பக்தியுடன் ஆராதனை செய்பவர்களுக்கு தன் திவ்யமான தரிசனத்துடன், ஆனந்தத்தில் மூழ்கச் செய்துவிடுவார். தன்னை நிர்மலமான மனதுடன் சேவிப்பவர்களை எந்த நேரத்திலும் காப்பாற்றுவார். அந்த ஸ்வாமியையே தினமும் ஸ்மரனை செய்பவர்களுக்கு எந்த வித ஆபத்தும் அணுகாது ஸகல காரியங்களிலும் வெற்றிகிடைக்கும்.

# மூன்றாம் அத்தியாயம்

## சுப்பி செட்டி கதை

ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமி சிரஞ்சீவி மிகவும் பராக்கிரமம் பொருந்தியவர் மிகவும் சக்தி வாய்ந்த ஆஞ்ஜனேய ஸ்வாமி இன்றும் இருக்கிறார். தன்னை நம்பி வணங்கும் பக்தர்களை மாருதி கண்ணின் இமைபோல் காத்து வருகிறார். அந்த ஸ்வாமியை நினைத்துக் கொண்ட நேரத்திலேயே ஏதாவது ஒரு ரூபத்தில் வந்து நமக்கு தைரியத்தை அருள்கிறார். ஏதாவது ஒரு பட்சிரூபத்திலாவது வந்து நம் பயத்தை போக்கி நம்மை ரட்சிக்கிறார்.

பூர்வ காலத்தில் ஆந்திரப்பிரதேசத்தில் தர்மபுரி என்ற ஊர் இருந்தது. அந்த ஊரில் சுப்பிசெட்டி என்ற வியாபாரி இருந்தார், சின்ன சின்ன வியாபாரத்தில் ஆரம்பித்து, காலம் கனிந்து வந்ததால் குறுகிய காலத்திலேயே பெரிய செல்வந்தரானார். வியாபாரத்தை மிகவும் விஸ்தரித்தார். அவரைப் பார்த்தால் பெரிய பக்திமான் போல் தோன்றினாலும், உள்ளுக்குள் மிகவும் கருமியாக இருந்தார். தன் கீழ் வேலை பார்ப்பவர்களை நியாயமாக நடத்த மாட்டார். ஏதாவது பகவத் கைங்கரியத்துக்காக ரூ100 தானம் கொடுத்துவிட்டால் அதற்கு 10 மடங்கு லாபம் வரும் வரை, எவ்வளவு ஏழையாயிருந்தாலும் 10பைசா கூட கொடுக்கமாட்டார்.

அந்த ஊரில் மிகவும் அற்புதமான ஆஞ்ஜனேய ஸ்வாமி ஆலயம் இருந்தது. ஒவ்வொரு மாதமும் சுப்பிசெட்டி ஆலயத்திற்கு சென்றுவருவார். நான்கனாவிற்க அர்ச்சனை செய்து வீட்டிற்கு சரிபட்ட நைவேத்தியம் பொட்டலம் கட்டிக்கொண்டுபோவார்.

அன்று ஒருநாள் சனிக்கிழமை ஆஞ்ஜனேய ஸ்வாமிக்கு நித்யபூஜைகள் மிகவும் விமரிசையாக நடந்தது. எத்தனையோ பக்தர்கள் ஸ்வாமியை தரிசித்துக் கொண்டு சென்றனர். இதற்குள் சுப்பிசெட்டி கூட வந்தார். எப்போதும் போலவே நான்கனாவிற்கு அர்ச்சனை செய்து கண்டிப்புடன் அர்ச்சகரை கேட்டு வீட்டுக்கு பிரசாதம் பெற்றுக் கொண்டு எருது வண்டியில் ஏறி வீட்டுக்கு கிளம்பினார். சிறிது தூரம் சென்ற உடன் அந்த ஊர் ஜமீன்தாரின் வண்டி எதிரில் வந்தது. சுப்பிசெட்டி உடனே வண்டியை விட்டு இறங்கி ஜமீன்தாருக்கு நமஸ்காரம் செய்து நலம் விசாரித்தார். அப்போது ஜமீன்தார் சுப்பிசெட்டியை 40மைல் தூரத்திலுள்ள ராமாவரம் என்ற ஊரிலிருந்து 100 கிலோ துவரம் பருப்பு வேண்டும் என்று பணக்காரரிடம் இருந்து தகவல் வந்தது. அதை சுப்பிசெட்டியால் ஏற்பாடு செய்து தரமுடியுமா? ஏன்று கேட்பதற்காக தானே அவரை தேடி வர இருந்ததாக கூறினார். இதை கேட்ட சுப்பிசெட்டி வார்த்தைகள் வரவில்லை, மகிழ்ச்சியில் திளைத்தார், 100 கிலோ என்றால் எவ்வளவு லாபம், எவ்வளவு நல்ல வியாபாரம் கிடைத்தது என்றெண்ணி, தவறாமல் ஒரு வாரத்திற்குள் அனுப்பி வைப்பதாக கூறினார். ஜமீன்தார் மறுபடியும் வண்டியில் ஏறிதன் பயணத்தை தொடர்ந்தார். சுப்பிசெட்டியும் தன் வண்டியில் ஏறி வீட்டிற்கு கிளம்பினார்.

வண்டியில் அமர்ந்த சுப்பிசெட்டி அளவிட முடியாத மகிழ்ச்சியில் இருந்தார். 100கிலோ துவரம்பருப்பு என்றால் சாமானியமா? எவ்வளவு லாபம் சம்பாதிக்கலாம் என்று மகிழ்ந்தார் இதற்குள் வீடுவந்துவிட்டது. மிகவும் பெரிய அளவில் வியாபாரம் கிடைத்த மகிழ்ச்சியால் ஸ்ரீ ஹனுமந்த

ஸ்வாமியின்பிரசாதத்தை மறந்து விட்டார். வீட்டில் நுழைந்த உடனே ஆரவாரமாக மனைவியிடம் துவரம் பருப்பு வியாபாரத்தை பற்றி கூறினார். சாப்பிட்டு விட்டு படுத்தாலும் நினைவெல்லாம் துவரம் பருப்பின் மீதே இருந்தது. எவ்வளவுலாபம் வைத்துவிற்க வேண்டும், கொஞ்சம் தரம் குறைந்த பருப்பை அனுப்பினால் இன்னும் அதிக லாபம் கிடைக்கும் என்று யோசனை செய்துகொண்டே தூங்கினார். பிரசாதம் பற்றிய நினைவு அவருக்கு வரவில்லை. இதற்குள் காலை விடிந்து விட்டது, காலையில் குளித்து விட்டு வந்தஉடனே சுவற்றில் மாட்டியிருந்த ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமியின் படத்தைப் பார்த்ததுமே சுப்புசெட்டிக்கு ஸிவாமியின் பிரசாதம் நினைவுக்கு வந்தது. வீட்டுக்கு வெளியே வந்து வண்டியில் சென்று பார்த்த போது பிரசாதம் நிறைய எறும்புகள் வந்து மொத்தம் சாப்பிட்டு விட்டது. கொஞ்சம் கூட மிச்சமில்லை ஐயோ என்று நினைத்துக் கொண்டே வீட்டிற்குள்வந்தார்.

ஸ்ரீ ஸ்வாமியின் பிரசாதத்தை அலட்சியம் செய்ததால் ஸ்ரீ ஸ்வாமிக்கு கோபம் வந்தது. எப்படிபட்ட சந்தர்ப்பத்திலும் எந்த தேவதா ப்ரசாதங்களையம் யாரும் அலட்சியம் செய்யக்கூடாது. தேவர்களுக்கு (கடவுளுக்கு) நைவேத்தியம செய்த பிரசாதத்திற்கு அற்புதசக்தி உண்டு அந்த பிரசாதத்தை வாங்கி சாப்பிடால் நல்ல ஆரோக்கியமும், எந்த வியாதியாக இருந்தாலும் ஒரு நொடியில் தீர்ந்துவிடும். ஹனுமந்த ஸ்வாமி பிரசாதத்தை கூட அலட்சியம் செய்தானே என்று ஸ்வாமிக்கு கோபம் வந்தது. அவ்வளவு பெரிய பாவம் செய்த சுப்புசெட்டிக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என நினைத்தார். அதன் பிறகு 4 நாட்களில் சுப்பு செட்டி 100 கிலோ துவரம் பருப்பை குமாஸ்தாக்களிடம் கொடுத்து வண்டியில் ஏற்றி ராமாபுரம் அனுப்பிவைத்தார். அந்த வண்டி ஊர் எல்லையை

தாண்டி கொஞ்ச தூரம் சென்ற பொது. எங்கிருந்தோ ஒரு வானரக் கூட்டம் திடீரென்று வந்து அந்த வண்டியின் மீது குதித்தது. வண்டிக் காரன் பயந்துபோய் வண்டியை விட்டு ஓடிவிட்டான். அந்த குரங்குகள் குமாஸ்தாவின் மீதும் விழுந்ததால் அவரும் பயந்து ஓடினார். அதன் பிறகு வானரக் கூட்டம் துவரம் பருப்பு இருந்த மூட்டையை கிழித்து அதன் இஷ்டம் போல் நிலத்தின் மீது இறைத்தும், புதரில் வாரி இறைத்தும் விட்டது. நடந்த சம்பவத்தை அறிந்து சுப்புசெட்டி மிகவும் மன வேதனை அடைந்தார். எவ்வளவு பணம் விரயம் ஆயிற்றே என்று மிகுந்த வருத்தம் அடைந்தார். அதன் பிறகு சுப்புசெட்டியின் வியாபாரம் கூட நசித்துவிட்டது. தீராத வியாதியால் மரணம் சம்பவித்தது.

ஹனுமந்த ஸ்வாமியின் பிரசாதத்தை அலட்சியம் செய்ததால் சுப்புசெட்டி அடுத்த ஜன்மத்தில் கழுதையாகப் பிறந்தான் எஜமானி முதுகின் மீது வைக்கும சுமையை சுமக்கும் மிகவும் மோசமான வாழ்க்கை வாழ்ந்து வந்தான். முதுகில் உரசியபடி புண் ஏற்பட்டு மிகவும் அவதிப்பட்டாலும் கூட எஜமானி அலட்சியமாக மிகுந்த சுமையை சுமக்கச்செய்தாள். இப்படி கொஞ்சகாலம் கஷ்ட ஜீவிதம் செய்து மரணம் அடைந்தான். சுப்புசெட்டி மறு ஜென்மத்தில் எலியாகப் பிறந்தான். பகவானைப் பற்றி செய்யும் எந்த பாவசெயல்களும் ஜென்ம ஜென்மத்திற்க்கும் அவர்களை வாட்டி வதைக்கும். அதிலும் ஹனுமந்த ஸ்வாமியின் கோபத்திற்கு ஆளானவர்கள் இன்னும் தீவிரமாக தண்டனை அனுபவிப்பார்கள்.

எலிரூபத்தில் இருக்கும் சுப்புசெட்டி வயல்களிலும், கிடங்குகளிலும் அலைந்து திரிந்து கடைசியல் பூனை கண்ணில் பட்டு கோரமாக கொல்லப்பட்டான். அதற்கு

அடுத்து வந்த பிறவியில் சுப்புசெட்டி கிளி ரூபத்தில் பிறந்தான். அந்த கிளி அந்த மரத்திற்கும், இந்த மரத்திற்கும் குதித்துக்கொண்டே, ஒரு நாள் தர்மாபுரம் ஸ்ரீ ஆஞ்சனேய ஸ்வாமி கோவிலை அடைந்தது. அந்த கோவிலின் பிரகாரத்தில் உள்ள மரத்தில் அமர்ந்ததுமே, அதற்கு தன் பூர்வ ஜன்ம விருத்தாந்தம் நினைவுக்கு வந்தது. ஸ்வாமி பிரசாதத்தை அலட்சியம் செய்ததாலேயே தனக்கு இவ்வளவு கஷ்டங்கள் வந்தது என தெரிந்து கொண்டது. தன் பாவத்திற்கு பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று நினைத்து, அந்த மரத்தின் மீது இருந்து கொண்டு, பக்தர்கள் சாப்பிட்டு விட்டு போகும் எச்சில் தொப்பைகளில் உள்ள பருக்கைளை சாப்பிட்டு காலம் கழித்துவந்தது. தினமும் பிரகாரத்தில் அந்த பக்கமும், இந்த பக்கமும் பார்த்து எங்காவது சிறு பருக்கை (பிரசாதம் துளி) இருந்தால் கூட அதை தன் மூக்கால் எடுத்துக்கொண்டு, மரத்தின் மீது அமர்ந்து கொண்டு பெரிய பாக்கியமாக நினைத்து கிளி ரூபத்தில் இருக்கும் சுப்புசெட்டி சாப்பிட்டு வந்தான். இப்படியாக ஒரு வருடம் கழித்து ஒரு நாள் பெரிய காற்று, மழையை தாங்க முடியாமல் மரணமடைந்தார். தினமும் இப்படி பிரசாதத்தை சாப்பிட்ட புண்ணியம் காரணமாக மறுஜென்மத்தில அதே ஊரில் அர்ச்சகர் குடும்பத்தில் பிறந்து ஆஞ்ஜனேய ஸ்வாமியை தினமும் சேவை செய்து தர்மத்தையே நினைத்து நடந்து வந்தார். எவ்வளவோ மிகவும் நல்ல அர்ச்சகராகவும் ஸ்வாமியின் ப்ரியபக்தராகவும், பெயர் பெற்று வாழ்ந்த காலம் வரையில் சுகமாக வாழ்ந்து இறுதியில் முக்தி அடைந்தான்.

ஸ்ரீ ஆஞ்சனேய ஸ்வாமியின் பிரசாத மகிமை அளவிட முடியாதது. அந்த ஸ்வாமிக்கு நிவேதனம் செய்த எந்த பொருளானாலும் அமிர்தத்திற்கு சமானமாகும். கண்களில் ஒற்றிக் கொண்டு ஏற்றுக் கொள்பவர்களுக்கு எந்த வியாதியும் தீர்ந்துவிடும் புது வாழ்க்கை கிடைக்கும். எந்தவொரு ஆபத்தும் வராது. தொடங்கிய எந்த காரியத்திலும் வெற்றி கிடைக்கும்.

## நான்காவது அத்தியாயம்
## ஸ்ரீ ஆனந்த ஆஞ்சனேய திவ்யகதை

முன்னொரு காலத்தில் கலிங்க தேசத்தில் உள்ள ராமாபுரத்தில் மிகவும் அற்புதமான ஸ்ரீ ராமர் ஆலயம் இருந்தது. அங்கு உள்ள ஸ்ரீ சீதாராமச்சந்திரரின் விக்ரஹங்கள் மிகவும் அற்புதமாக தேஜஸீடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவர்கள் பாதத்தின் அருகிலேயே ஸ்ரீ ஆஞ்சனேயரின் விக்ரஹம் பார்ப்பதற்கு மிகவம் அழகாக இருந்தது. பிரதி வருடமும் நடக்கும் ஸ்ரீ ராமநவமி உற்சவத்தில் ஸ்வாமிகளின் மூல விக்ரகங்களை எவ்வளவோ அற்புதமாக அலங்காரம் செய்வார்கள். பிரதி தினமும் ஹரி கதா காலட்சேபங்கள் நடைபெறும். சுற்றுப் புறத்தில் உள்ள ஊர்களிலிருந்தும் எவ்வளவோ பக்தர்கள் எருது வண்டிகள் கட்டிக் கொண்டு ராமாபுரம் வருவார்கள். அந்த 10 நாட்களும் ஊர் முழுவதும் எவ்வளவோ கோலாகலமாய் காட்சியளிக்கும். ஊரில் உள்ளவர்களின் வீடுகளும் அவர்களுடைய பந்து மித்திரர்களின் வருகையால் கலகலப்பாக இருக்கும்.

பிரதி வருடம் போலவே அந்த வருடமும் கூட ஸ்ரீ ராமநவமி உற்சவங்கள் மிகவும் அற்புதமாக ஆரம்பிக்கப்பட்டது ஒருநாள் மாலையில் ஆலய பிரகாரத்தில் உள்ள மண்டபத்தில் பக்கத்து ஊரிலிருந்து வந்த விஷ்ணு சர்மா என்னும் பண்டிதர். ராமாயண கதையை விவரித்து நடுவிலே ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமியைப் பற்றி இவ்வாறு கூறினர். பக்தர்களே! ஸ்ரீ ஆஞ்சனேய ஸ்வாமி மிகவும் சக்தி வாய்ந்தவர், மிகவும் தைரியசாலி, சகலகலா வல்லவர். அந்த ஸ்வாமிக்கு தெரியாத வித்தைகளே கிடையாது. அது மட்டுமன்றி எல்லா வித்தைகளிலும் மிகவும் கைதேர்ந்தவர்.

மிகவும் இலக்கண, இலக்கியங்கள் தெரிந்த பண்டிதர். நூறு யோஜனை நீளமுள்ள சமுத்திரத்தையே, சுலபமாக தாண்டிச் சென்ற மகா பலசாலி ஹனுமன். அந்த ஸ்வாமி சிரஞ்சீவியாய் இன்னும் நம் மத்தியிலேயே இருக்கிறார். அந்த ஸ்வாமியை நம்பி வேண்டிக் கொண்டவர்களுக்கு எந்த ஆபத்தும் அணுகாது. எந்த விதமான உடல் நலக்குறைவும் சீக்கிரமாக விலகிவிடும். ஸ்வாமியின் பிறந்த நட்சத்திரம் சில புராணங்களில் பூரட்டாதி என்றும் வேறுசில புராணங்களில் சுவாதி என்றும் கூறப்படுகிறது. அந்த ஸ்வாமிக்கு வாழைப்பழமும், மாம்பழமும் மிகவும் ப்ரீதியானது. அந்த பழங்களை அவருக்கு நைவேத்தியம் செய்தால் மிகவும் சந்தோஷப்படுவார். ஹனுமந்த ஸ்வாமிக்கு செந்தூரம் மிகவும் பிடித்தமானதாகும். ஸ்ரீ ஸ்வாமிக்கு செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகள் மிகவும் ப்ரிதியானதாகும் இந்த நாட்களில் அவரை ஆராதனை செய்தால் மிகவும் விசேஷமானது என்று, விஷ்ணு சர்மா ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமியின் பெருமைகளை மிகவம் விவரமாக எடுத்துரைத்தார்.

விஷ்ணு சர்மா மாருதியின் மகிமைகளை விசேஷமாக இவ்வாறு எடுத்துரைக்க ஆரம்பித்தார். ஹனுமந்த ஸ்வாமிக்கு தன் பக்தர்கள் என்றால் மிகவும் நேசிப்பவர். அது மட்டுமல்லாமல் ஸ்ரீ ராமச்சந்திரன் பக்தர்கள் என்றாலும் மிகவும் நேசிப்பார். ஹனுமந்த ஸ்வாமியை தினமும் ஸ்மரனை செய்தால் எந்த வித பயமும் இருக்காது. நல்ல ஆரோக்கியத்துடன், நல்ல மன ஆலோசனையுடன் உற்சாகமாக இருப்பார்கள். அந்த ஸ்வாமியை தினமும் ஆராதனை செய்பவர்களுக்கு அவர்கள் சங்கல்பித்த காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். ஹனுமந்த ஸ்வாமி ஆலயம் இருக்கும் ஊரில்

எந்த கெடுதலும் நடக்காது.அந்த ஊரில் உள்ள மக்கள் எல்லாம் எப்போதும் சுகமாக, சந்தோஷத்துடன் வாழ்வார்கள். ஸ்ரீ ஆஞ்சனேய ஸ்வாமி ஆலயம் உள்ள கிராமங்களில் உள்ள சுற்றுப் புறங்களில் கூட எந்த தீய சக்தியும் அணுகாது. அந்த கிராமங்களில் உள்ள விளை நிலங்கள் மிகவும் செழிப்பாக இருக்கும். அந்தந்த பருவத்தில் மழை பொழியும். அது மட்டுமன்றி அந்த ஸ்வாமி ஆலயம் உள்ள கிராமத்தில் அக்னி பயமோ, தீ விபத்தோ ஏற்படாது அந்த ஸ்வாமியின் மகிமையால் ஊர் மக்கள் மட்டுமன்றி சுற்றுப் புறத்தில் உள்ள மக்கள் கூட மிகவும் சந்தோஷமாக வாழ்வார்கள் என்றார.

அப்போது அங்கிருந்த பக்கதர்களில் ஒருவர் விஷ்ணுசர்மாவிடம் இவ்வாறு கூறினார். ஸ்வாமி ஹனுமந்த ஸ்வாமியின் பெருமைகளை மிகவும் விவரமாக கூறினீர்கள். எங்கள் ஊரில் இந்த நாள் வரை ஹனுமந்த ஸ்வாமியின் ஆலயம் தனியாக இல்லை. உடனே நாங்கள் அனைவரும் கலந்து தவறாமல் ஸ்வாமிக்கு ஆலயம் கட்டுகிறோம் என்று கூறினார். இதைக் கேட்ட விஷ்ணுசர்மா பக்தர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார். பக்தர்களே இந்த பக்தனின் ஆலோசனை மிகவும் உயர்வானது. சங்கல்பம் நிச்சயமாக இருந்தால் ஸ்வாமி நம்மை தவறாமல் அனுக்ரஹிப்பார். கூடிய விரைவிலேயே நாம் இங்கு ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமி ஆலயத்தை கட்டமுடியும், ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமி ஆனந்தஸ்வரூபன். அந்த ஸ்வாமி தரிசனத்தினால் நமக்கு ஆனந்தம் கிடைக்கும். நம்மில் உள்ள பயம் எல்லாம் விலகிப்போய்விடும் என்று சொல்லும் போதே வானத்தில் கார்மேகங்கள் சூழ்ந்துகொண்டது. எப்படி ஒரு நொடியில் இவ்வளவு மேகங்கள் சூழ்ந்தது என்ற வானத்தை பார்க்கும் போது அவர்களுக்கு ஒரு அற்புதமான காட்சி கண்களில்பட்டது.

மேகங்களுடன் கூட மின்னலும் வரத்தொடங்கியது அந்த மின்னல் மிகவும் பிரகாசமாக தென்பட்டது. அதற்குள் ஒரு முறை அந்த மேகங்கள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமியைப் போல் தரிசனம் கொடுத்தது. ஸ்ரீ ஆகாயத்தில் அற்புதமாக மின்னல்களுடன் அந்த ஸ்வாமியின் திவ்ய திருஉருவம் தென்பட்டது. ஸ்ரீ ஆஞ்சனேய ஸ்வாமியின் திவ்ய தரிசன பாக்கியத்தால் பக்தர்களின் உடம்பெல்லாம் புல்லரித்தது அனைவரும் ஒருமுறை கைகூப்பி வணங்கி நமஸ்கரித்து ஓ ஆஞ்ஜனேயா! வாயு புத்ரா? மஹாபலசாலி! ஏன்று எத்தனையோ விதமாக துதித்தனர். சிறிது சிறிதாக அந்த உருவம் பெரிதாகவளர்ந்து இன்னும் பிரகாசமாக தென்பட்டது. அந்த ஸ்வரூபத்தை சுற்றி உள்ள காந்தியால் (ஒளியால்) ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமி மிகவும் நன்றாக தரிசனம் கொடுத்தார். அந்த ஸ்வாமி கழுத்தில் மிகவும் அழகாக பூமாலைகளை அனிந்திருந்தார். காதுகளில் மகர குண்டலங்கள் தரித்திருந்தார், கழுத்தில் திவ்யமான ஸ்வர்ண ஆரம் இருந்தது. எல்லாவற்றறையும் மிஞ்சி அந்த ஸ்வாமி புன் சிரிப்புடன் தரிசனம் கொடுத்தார். கீழே உள்ள பக்தர்கள் அனைவரும் சத்தமாக ஓ! ஆனந்த ஆஞ்ஜனேய நமஸ்காரம்! ஜெய் ஆனந்த ஆஞ்ஜனேயா என்று துதித்தார்கள். அப்போது ஒரு அற்புதம் நிழந்தது, ஆகாயத்தில் இருந்த ஸ்வாமியின் திவ்ய உருவம் கொஞ்சம் கொஞ்சமாக அளவுகுறைந்து வெகுசீக்கிரத்தில் பூமியை நோக்கிவந்தது. அப்படி வந்த சிறிய சிலை உருவமானது நின்ற வடிவில் ஆலய பிரகாரத்தில் விழுந்தது. இந்த அற்புத நிகழ்ச்சியை பார்த்த பக்தர்களின் ஆனந்தத்திற்கு அளவில்லை. ஸ்வாமி மிகவம் ப்ரகாசமாக மந்த ஹாசமாகபுன்சிரிப்புடன் காட்சிஅளித்தார். அந்த ஆஞ்ஜனேயரின் சிலையைப் பார்த்து பக்தர்கள் அனைவரும் மிகவும் பரவசம் அடைந்தனர்.

ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமி தானேசுயம்புவாக தோன்றியதற்கு கிராம மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். இதெல்லாம் நாங்கள் பூர்வ ஜென்மத்தில் செய்த புண்ணியத்தின் பலன் என்று நினைத்தார்கள். அனைவரும் கலந்து ஒவ்வொருவரும் ஒருவேலையாகச் செய்து ஸ்வாமி ஆலயத்தை அற்புதமாக நிர்மாணித்தனர். அந்த ஸ்வாமி ஆனந்த ஆஞ்ஜனேயராக பிரசித்தி பெற்று தன்னை நம்பியவர்களை எந்த ஒரு ஆபத்தும் அணுகாமல் காப்பாற்றினார். சிறிது காலத்திலேயே ஆலயம் மிகவும் பிரசித்திபெற்று அங்கு குடிகொண்டுள்ள ஆனந்த ஆஞ்ஜனேய ஸ்வாமி பக்தர்களின் கோரிக்கைளை எல்லாம் தீர்த்துவைக்கும் கற்பக விருட்சமாக பிரசித்தி பெற்றார் ஓ ஆனந்த ஆஞ்ஜனேயா உமக்கு இதுவே எங்களது நமஸ்காரங்கள். ஓ மஹா பலசாலி உமக்கு இதுவே எங்களுடைய நமஸ்காரங்கள். ஓ பக்தவச்சலா உமக்கு இதுவே எங்களுடைய நமஸ்காரங்கள்.

# ஐந்தாவது அத்தியாயம்

## கேசவபுரம் (ஹனுமானின் திவ்ய கதை) திவ்ய கதை

முன்னொரு காலத்தில் ஸ்ரீசைல ஷேத்திரத்தின் அருகில் கேசவபுரம் என்னும் கிராமம் இருந்தது. அந்த கிராம மக்கள் அனைவரும் எப்போதும் சுக, சந்தோஷத்துடன் வாழ்ந்து வந்தனர். அனைவரும் ஒற்றுமையாக இருந்து வந்தனர். அனைத்து தொழில் செய்பவர்களும், அவர்களுக்கேற்ற வேலைகள் கிடைத்து சந்தோஷமாக குடும்பத்தை நடத்தி வந்தனர். அந்த ஊரில் மிகவும் அற்புதமாக ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமி ஆலயம் இருக்கிறது. அந்த ஸ்வாமி மிகவும் மகிமை பொருந்தியவராக சுற்றுப்புற கிராமங்களில் பிரசித்திபெற்றார். எத்தனையோ பக்தர்கள் தினமும் அந்த ஸ்வாமியைதரிசித்து அவர்களது கோரிக்கைகளை தீர்த்து வைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அப்படி கோரிக்கைகள் கூடியசீக்கிரம் தீர்ந்தபின் குடும்ப சகிதமாக வந்து ஸ்வாமியை நம்பி சேவிப்பர்களுக்கு எப்படிப்பட்ட பிரச்சனைகளும் சுலபமாகதீர்ந்துவிடும் என்று பக்தர்கள் நினைத்தனர்.

நாட்கள் இப்படி கழிந்து கொண்டிருக்கையில் தீவிர வறட்சி ஏற்பட்டது. மழை இல்லாமல் பயிர்கள் சரியாக விளையவில்லை மக்கள் மிகவும் அவதிப்பட்டனர். குடும்பம் நடத்துவது மிகவும் கஷ்டமாக இருந்தது. இப்படி இருக்கையில் ஒருநாள் அந்த ஊருக்கு காசியிலிருந்து ஒரு மகாபண்டிதர் தக்ஷிணதேச யாத்திரையாக வந்து சேர்ந்தார். ஊர் மக்கள் எல்லோரும் அந்த பண்டிதரை நமஸ்கரித்து இந்த பஞ்சம் தீர வழி சொல்லுமாறு கேட்டுகொண்டார்கள். அப்போது அந்த பண்டிதர் கண் மூடிதியானம் செய்து

ஏதோ தெரிந்து கொண்டவராய் அவர்களிடம் இப்படி கூறினார். மக்களே உங்கள் அனைவருடைய கஷ்டங்களையும் அறிந்தேன், நல்ல மழை பெய்து நீங்கள் எல்லோரும் சந்தோஷமாக இருப்பதற்கு ஒரு வழி இருக்கிறது. அதைச் சொல்கிறேன் கேளுங்கள். உங்கள் ஊரில் உள்ள ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமி ஆலயத்தில் வரும் பௌர்ணமியன்று பூர்த்தி அடையும் வகையில் 3 நாட்கள் முன்னதாக ஸ்வாமிக்கு உற்சவங்கள் ஏற்பாடுசெய்யுங்கள். அந்த ஸ்வாமியை தினமும் அஷ்டோத்திரங்களால் பூஜை செய்யுங்கள் பௌர்ணமியன்று மிகவும் விமரிசையாக பூஜையை நடத்துங்கள். ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமி கருணைக் கடலானவர் அந்த ஸ்வாமி அனுக்ரஹம் உங்கள் அனைவரின் மீதும் தவறாமல் பட்டு நீங்கள் மிகவும் சுகம், சந்தோஷத்துடன் வாழ்வீர்கள்.

அதைக் கேட்ட கிராம மக்கள் அனைவரும் மிகவும் மகிழ்ந்து அவர்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் கலந்து பேசி அந்த பண்டிதரிடம் இவ்வாறு கூறினர். ஸ்வாமி நீங்கள் மகாபண்டிதர் நீங்கள் தேஜஸில் காசி விஸ்வநாதர் போல் உள்ளீர்கள் எங்கள் மீது தயைகூர்ந்து எங்கள் கிராமத்தில் சில நாட்கள் தங்கி உங்கள் பொற்கரத்தினால் அந்த உற்சவத்தை நடத்திதர வேண்டும் என்பது எங்கள் பிரார்த்தனை என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு அந்த மகா பண்டிதர் அப்படியே ஆகட்டும் என்றார். அதன் பிறகு 4 நாட்களில் திரயோதசிதிதி வந்தது இந்த 4 நாட்களும் அந்த மகாபண்டிதர் ஸ்வாமியின் ஆலயத்திலேயே தங்கி இருந்தார். அந்த 4 நாட்களும் பிரதி தினமும் மாலையில் ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமி வைபவத்தை மிகவம் நன்றாக விவரிப்பார். அந்த விசேஷங்களை எல்லாம் கேட்டு பக்தர்கள் எல்லாம் மிகவும் சந்தோஷம் அடைந்தனர்.

திரயோதசி அன்று காலையிலேயே உற்சவம் மிகவும் விமரிசையாக துவங்கியது. ஆலயத்தை வாழை மரங்களாலும், வித விதமான மலர்களாலும், எவ்வளவோ விதமாக கண்ணைப்பறிக்கும் வகையில் அலங்காரம் செய்தனர். எந்த பக்கம் பார்த்தாலும் வண்ண வண்ண மலர்களால் பக்தர்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும்படி அலங்காரம் செய்தனர். ஊரில் உள்ள பெரிய மனிதர்கள் எல்லாம் காலையிலேயே எழுந்து சுத்தமாக குளித்து விட்டு ஆலயத்துக்கு வந்தார்கள். ஆலய அர்ச்சகர்களுடன் காசியில் இருந்து வந்த பண்டிதரும் விசேஷ பூஜைகள் செய்வதற்கு தயார் செய்து கொண்டிருந்தார். வந்த பக்தர்கள் அனைவரும் நடக்க இருக்கும் பூஜையை தரிசிப்பதற்கு பக்தி சிரத்தையுடன் இருந்தனர். இப்படி இருக்கையில் வானத்தில் பெரிய காற்று ஏற்பட்டது. அந்த காற்றின் தீவிரம் எப்படி இருந்தது என்றால் ஆலயத்தில் கட்டிய வாழை மரங்கள் ஊசலாடிக்கொண்டிருந்தது. அது மட்டுமல்லாமல் ஒரு அரைமணி நேரம் காற்று இப்படியே இருந்தால் ஊரில் உள்ள வீட்டுக் கூரைகள் பறந்து போகும் இதுநிச்சயம் இப்படி மிகவும் வேகமாக வீசும் காற்றைப் பார்த்து பக்தர்கள் அனைவரும் மிகவும் பயந்தனர். என்ன செய்வதென்று யாருக்கும் தோன்றவில்லை எல்லோருமாக கலந்து அந்த காசி பண்டிதரையே வேண்டிக்கொண்டார்கள். அப்போது அந்த பண்டிதர் அவர்களிடம் இவ்வாறு கூறினார். மக்களே எந்தவிதத்திலும் பயப்படவேண்டாம், நாம் வணங்கிக்கொண்டிருக்கும் ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமி வாயு புத்திரனல்லவா! நீங்கள் அனைவரும் அந்த ஸ்வாமியை பிரார்த்தனை செய்யுங்கள் அப்போது அந்த வாயுதேவன் சாந்திஅடைவார் என்று கூறினார்.

இதைக்கேட்ட பக்தர்கள் அனைவரும் ஆஞ்ஜனேயை ஸ்வாமியை பலப்பல விதமாக பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தனர் சிலபேர் அந்த ஸ்வாமியின் குணாதிசயங்களை ஸ்தோத்திரங்கள் மூலம் சொல்ல ஆரம்பித்தனர். மற்றும் சிலபேர் பஜனைகள் செய்ய ஆரம்பித்தனர், இன்னும் சில பக்தர்கள் அந்த ஸ்வாமியின் மகிமைகளை பாட்டுபாடிக் கொண்டும் நடனம் ஆடிக்கொண்டுமிருந்தனர். கொஞ்சநேரத்திலே ஸ்வாமி அனுக்ரஹத்தால் காற்றும், மழையும் பூரணமாக குறைந்தது அந்த ஸ்வாமி தங்களுக்கு அனுக்ரஹம் செய்ததற்கு எவ்வளவோ சந்தோஷம் அடைந்தார்கள். ஸ்வாமியை எந்தனையோ விதங்களில் துதித்தார்கள். அப்பொழுது ஒரு அற்புதம் நிகழ்ந்தது. ஸ்வாமி ஆலயம் இருந்த பிரதேசத்தில் திவ்யமான பிரகாசத்துடன் ஒருமுறை அங்கே ஸ்ரீ ஹனுமந்த ஸ்வாமியின் திவ்யரூபம் பனைமர உயரத்திற்கு தரிசனம் அளித்தது. அந்த அற்புததரிசனத்தைக்கண்ட பக்தர்கள் அனைவரும் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். ஸ்வாமி இந்த விதமாக ஒரு நிமிஷ நேரம் வரை தரிசனம் கொடுத்துமறைந்தார். ஸ்வாமி தரிசன பாக்கியம் கிடைத்ததால் சந்தோஷம் இரட்டிப்பானது. அந்த இரட்டிப்பான சந்தோஷத்தில் பக்தர்கள் அந்த 3 நாட்கள் உற்சவத்தை மிகவும் பக்தி சிரத்தையுடன் நடத்தினர். ஊரெல்லாம் திருவிழாக் கோலம் பூண்டது. பௌர்ணமி அன்று மாலை நல்ல மழை பெய்தது மக்கள் எல்லோரும் மிகவும் சந்தோஷமடைந்தனர். இப்படிப்பட்ட விமரிசையான உற்சவத்தை நடத்திதந்த அந்த காசி பண்டிதரை மிகவும் கொண்டாடினார்கள், மறுநாள் அந்த காசி பண்டிதர் ஊர்மக்களிடம் விடை பெற்றுக்கொண்டு தனது யாத்திரையை தொடங்கினார். அந்த ஊர் மக்கள் அந்த பண்டிதருடன் சேர்ந்து ஊர் எல்லை வரை சென்று வழியனுப்பவைத்தனர்.

காசியிலிருந்து வந்த அந்த பண்டிதரை சிவாம்சம் பொருந்திய ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமியே தங்களுக்கு அனுக்ரஹம் செய்வதற்காக அனுப்பிவைத்தார் என்று நினைத்தனர்.

அதன் பிறகு சில நாட்களிலேயே மழை பெய்து பயிர்கள் எல்லாம் செழித்துவளர்ந்தது. மக்கள் அனைவரும் சுகமாக சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர். அதுமுதற்கொண்டு பிரதி வருடமும் கார்த்திகை மாதத்தில் இந்த 3 நாட்களும் எத்தனையோ அற்புதமாக ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸ்வாமிக்கு உற்சவத்தை நடத்திவந்தனர். அந்த ஸ்வாமி அனுக்ரஹத்தால் அந்த ஊர் மக்கள் நீண்டகாலம் சுகமாக வாழ்ந்து வந்தனர். அந்த ஊர் மக்கள் மட்டுமல்லாமல் சுற்றுப்புற கிராமங்களில் உள்ளவர்களும் இங்கே கொலுவிருக்கும் ஆஞ்ஜனேய ஸ்வாமியை சேவித்து நீண்டகாலம் சுகமாக வாழ்ந்தனர்.

**அதுலித பலதாமம் ஸ்வர்ண சைலாப தேஹம்**
**தனு ஜவன க்ருஹாணிம் ஜ்நாணிநா மக்ரகண்யம்**
**ஸகல குண நிதானம் வாண ராண மதிஸம்**
**ரகுபதி ப்ரிய பக்தம் வாத ஜாதம் நமாமி.**